**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியம் - 2016**

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற இரண்டு கணக்கு விடயங்களின் மீதிகள் இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தின் கணக்கு மீதிகளுடன் ஒப்பீடு செய்தபோது ரூபா 133,694,064 கூட்டுத்தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.3 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

நிர்வாகச் செலவினத்திற்காக 2005 இன் 28 ஆம் இலக்க சுற்றுலா அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடுகள் வழங்காதிருக்கும் போது நிர்வாகச் செலவினமாக ரூபா 6,442,081 தொகையொன்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 24(3) ஆம் பிரிவு | சுற்றுலா அபிவிருத்தி வரியை முகாமைத்துவப்படுத்துவதற்கும் நிர்வகிப்பதற்குமான விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 2(ஆ) ஆம் உப பிரிவு | கப்பலில் அல்லது விமான மூலம் இலங்கையிலிருந்து வெளியேறும் பயணிக்காக வழங்கப்படும் ஒவ்வொரு பயணச்சீட்டிலிருந்தும் வரி அறவிடப்பட்டு இதில் ஒரு பகுதி அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு கப்பலில் பயணிக்கும் பயணிகளிடமிருந்து வரி அறவிடப்பட்டு அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிராததுடன் கப்பலில் பயணிக்கும் பயணிகளிடமிருந்து வரி அறவிடப்படவில்லை. என்பதற்கான உறுதிப்படுத்தல்களும் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 169(2) | காசோலை தேறுவதற்கு முன் சேவை வழங்கியதன் காரணமாக 07 காசோலைகளுக்குரிய ரூபா 143,504 தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய வருமானம் ரூபா 3,644 மில்லியனாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் வருமானம் ரூபா 2,994 மில்லியன் ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வருமானத்தில் ரூபா 650 மில்லியன் தொகையான அதிகரிப்புக் காணப்பட்டது. குடியகல்வு வரி வருமானம் ரூபா 648 மில்லியனால் அதிகரித்தமை வருமான அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. மேலும் நிதியத்தின் கடந்த 05 வருடங்களின் ஒட்டுமொத்த வருமானம் தொடர்ச்சியான அதிகரிப்பொன்றினைக் காட்டுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் சேகரிக்கப்படும் குடியகல்வு வரிப் பணத்தில் 1/3 பங்கு மற்றும் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் தொடர்பான அதிகாரச்சட்டத்தின் கீழுள்ள சுற்றுலா அபிவிருத்தி வரித் தொகை நிதியத்தின் வருமானமாவதுடன், அது சுற்றுலா வணிகத்தின் மேம்பாடு அல்லது அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் செலவினங்களுக்காக இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகம், இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை சம்மேளன பணியகம் போன்றவற்றிற்கு முறையே 70, 12, 14 மற்றும் 4 சதவீதப் படி வழங்குவதற்கு அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

மீளாய்வாண்டினுள் நிதியத்தினால் ரூபா 6,734,861 தொகையான நிதியத்தின் நிர்வாக மற்றும் நிதி நடவடிக்கைகளுக்கான செலவினங்களை மேற்கொண்டதன் பின்னர் எஞ்சிய பணம் மேற்படி நிறுவனங்களுக்கு முறையே ரூபா 2,546,190,816 ரூபா 436,489,854 ரூபா 509,238,163 மற்றும் ரூபா 145,496,618 ஆக வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இந்த பணம் குறித்த நிறுவனங்களால் மேற்படி நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டதா என்பதை பின்தொடர்வதற்கான நடைமுறையொன்று நிதியத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 24(8) ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் செலவிலுள்ள சகல பணமும் உரிய நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிதியத்தின் செலவில் ரூபா 639,762,905 தொகையொன்று காணப்பட்ட போதிலும் அந்தப்பணத்தை பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுற்றுலா அபிவிருத்தி வரியை அறவிட வேண்டிய நிறுவனங்களை குறிப்பாக இனங்காண்பதற்கான முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 திசெம்பர் 11 ஆம் திகதிய 1318/24 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் 1 ஆம் 4 ஆம் பந்திகளிலுள்ள கட்டளைகளின் பிரகாரம், சுற்றுலா வரித் தொகை குறிப்பிட்ட காலப் பகுதியில் செலுத்தாதோருக்கு விதிக்கப்படும் தண்டப்பணம் போதியளவானதாக இல்லாமையினால் சுற்றுலா வரிப் பணத்தை செலுத்துவதனை ஊக்கப்படுத்துவதற்கு தாக்கமளித்திருக்கவில்லை.

(இ) 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 4(3) ஆம் பிரிவின் பிரகாரம் விமானக் கம்பனியால் குறித்த காலப்பகுதியின் போது வரி செலுத்தப்பட்டிராத சந்தர்ப்பங்களில் குறித்த தண்டப்பண வட்டியுடன் அத்தொகை அறவிடப்பட்டு அதிகாரசபைக்கு அனுப்பிவைக்கப்பட்டதா என்பனை உறுதிப்படுத்துவதற்கான முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

நிதியத்தின் பிரதான 2 வருமான மூலங்களான குடியகல்வு வரி வருமானம் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் போன்றவற்றை சேகரித்தல், நிலுவை வரி வருமானத்தை கணிப்பிடல், வரி வருமானத்தை கணக்கு வைத்தல் மற்றும் வரி அறவிடும் முறைமைகளிலான கட்டுப்பாட்டு நலிவுகளை இனங்காணுவதற்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.2 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், 2003 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 1303/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் குடியகல்வு வரியாக விமானம் மூலம் வெளிச்செல்லும் சகலரிடமிருந்தும் 15 ஐக்கிய அமெரிக்க டொலர்களும், கப்பல் மூலம் வெளிச்செல்லும் சகலரிடமிருந்தும் 2.5 ஐக்கிய அமெரிக்க டொலர்களும் அறவிடப்பட வேண்டிய போதிலும், இக் குடியகல்வு வரியை அறவிடும் சிவில் விமானச் சேவைகள் சேவை பணிப்பாளர் நாயகத்தால் 2004 ஆம் ஆண்டு முதல் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நாணய மாற்று விகிதாசாரத்தில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்த போதிலும், ஒரு ஐக்கிய அமெரிக்க டொலருக்கு ரூபா 100 எனும் அந்நிய செலாவாணிப் பரிமாற்ற அடிப்படையில் இவ் வரி அறவிடப்பட்டிருந்தமையால் இந்த காலப்பகுதியினுள் அண்ணளவாக ரூபா 300,000,000 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| (அ) கணக்கீடு | ஆண்டின் இறுதியில் சேமிக்கப்பட்ட பணத்தை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஆ) குடியகல்வு வரியைச் சேகரித்தல் | கப்பல் மூலம் பிரயாணம் செய்கின்ற பிரயாணிகளிடமிருந்து வரி அறவிடப்படாமை |
| (இ) உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படாமை |